# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## கொரோனா வைரஸ் தொற்று (கொவிட்-19)
## (தற்காலிக ஏற்பாடுகள்)

**கொவிட்-19 சூழ்நிலைகளின் காரணமாக விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் புரியப்படுவதற்கென சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட குறித்தசில வழக்குகளைப் புரிவதற்கு எந்த நிலைமைகள் தொடர்பில் ஆட்கள் இயலாதிருந்தனரோ அந்த நிலைமைகள் தொடர்பிலான தற்காலிக ஏற்பாடுகளை செய்வதற்கும்; கொவிட்-19 சூழ்நிலைகள் காரணமாக நீதிமன்றம் ஒன்று தொழிற்பட முடியாதிருக்குமிடத்து மாற்று நீதிமன்றங்களைக் குறித்தளிப்பதற்கும்; கொரோனா வைரஸ் தொற்றுநோயை 2019 (கொவிட்-19) கட்டுப்படுத்த வசதியளிப்பதற்கு தொலை தொடர்பாடல் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி நீதிமன்ற நடவடிக்கைகளை நடாத்துவதற்கும்; கொவிட்-19 சூழ்நிலைகள் காரணமாக ஒப்பந்தஞ்சார் கடப்பாடுகளை புரிவதற்கு இயலாதவர் களாகவிருந்த குறித்தசில ஒப்பந்தங்களிற்கான திறத்தவர்கள் தொடர்பில் நிவாரணத்தை அளிப்பதற்கும் மற்றும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்குமான சட்டமூலம்**

*நீதி அமைச்சர் அவர்களால் 2021, யூன் மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2021, மே மாதம் 20 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

[ **51 ஆம் சட்டமூலம்** ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 34.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*கொரோனா வைரஸ் தொற்று (கொவிட்-19)*
*(தற்காலிக ஏற்பாடுகள்)*

*ச.வ.- ஓ. 19/2020*

***கொவிட்-19 சூழ்நிலைகளின் காரணமாக விதித்துரைக்கப் பட்ட காலப்பகுதியினுள் புரியப்படுவதற்கென சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட குறித்தசில வழக்குகளைப் புரிவதற்கு எந்த நிலைமைகள் தொடர்பில் ஆட்கள் இயலாதிருந் தனரோ அந்த நிலைமைகள் தொடர்பிலான தற்காலிக ஏற்பாடுகளை செய்வதற்கும்; கொவிட்-19 சூழ்நிலைகள் காரணமாக நீதிமன்றம் ஒன்று தொழிற்பட முடியாதிருக்கு மிடத்து மாற்று நீதிமன்றங்களைக் குறித்தளிப்பதற்கும்; கொரோனா வைரஸ் தொற்றுநோயை 2019 (கொவிட்-19) கட்டுப்படுத்த வசதியளிப்பதற்கு தொலை தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நீதிமன்ற நடவடிக்கை களை நடாத்துவதற்கும்; கொவிட்-19 சூழ்நிலைகள் காரணமாக ஒப்பந்தஞ்சார் கடப்பாடுகளை புரிவதற்கு இயலாதவர்களாகவிருந்த குறித்தசில ஒப்பந்தங்களிற்கான திறத்தவர்கள் தொடர்பில் நிவாரணத்தை அளிப்பதற்கும் மற்றும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடை நேர்விளைவான கருமங்களுக்குமான சட்டம்.***

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சட்டத்தின் சுருக்கப்பெயரும் கால எல்லையும் நடைமுறை நீடிப்பும்*

***1.*** (1) இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின்                ஆம் இலக்க, கொரோனா வைரஸ் தொற்று (கொவிட்-19) (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். இச்சட்டத்தின் ஏற்பாடுகள் 2020 ஆம் ஆண்டு மாச்சு 1 ஆந் தேதியிலிருந்து தொடங்கும் இரண்டு ஆண்டு காலப்பகுதி ஒன்றிற்கு நடைமுறையில் இருத்தல் வேண்டும்.

(2) அமைச்சர் ஆனவர் இச்சட்டம் நடைமுறையில் இருக்கும் காலப்பகுதி காலாவதியாவதற்கு முன்னர் ஒருமாத காலத்தினுள் ஏதேனும் நேரத்தில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் மேலும் இச்சட்டத்தின் நடைமுறைக் காலப்பகுதி ஒன்றுக்கு நீடிக்கப்படலாம்:

ஆயினும், எவ்வாறாயினும் ஏதேனும் மொத்த நீடிப்புக் காலப்பகுதி அத்தகைய நீடிப்புத்தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளை விஞ்சுதலாகாது.

## பாகம் I

### விதித்துரைக்கப்பட்ட காலத்துடன் ஒத்திசைவதற்கு இயலாமலிருப்பதற்கான நிவாரணம்

*விதித்துரைக்கப்பட்ட காலத்துடன் ஒத்திசைவதற்கான இயலாமை தொடர்பிலான நிவாரணம்*

**2.** (1) ஆளொருவர்-

(அ) அத்தகைய நோக்கத்திற்காக சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் ஏதேனும் வழக்கு விண்ணப்பம், மேன்முறையீடு அல்லது வேறு சட்ட நடவடிக்கையை தொடருவதிலிருந்து அல்லது கோப்பிடுவதிலிருந்து தடுக்கப்பட்டுள்ளார்; அல்லது

(ஆ) விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றினுள் செய்துகொள்வதற்கு அல்லது புரியப்படுவதற்கு சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் செயலை புரிவதிலிருந்து தடுக்கப்பட்டுள்ளார் என

ஏதேனும் நீதிமன்றம், நியாயசபை அல்லது சட்டத்தினால் அல்லது அதன் கீழ் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் அதிகாரசபை திருப்திப்படுமிடத்து, அத்தகைய நோக்கத்திற்காக சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட காலம் கழிவது எவ்வாறிருப்பினும் பந்தி (அ) அல்லது (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட வழக்கு நடவடிக்கை அல்லது செயலை அனுமதிப்பதற்கு, ஏற்றுக்கொள்வதற்கு அல்லது ஏற்றுக் கவனிப்பதற்கு அத்தகைய நீதிமன்றம் நியாயசபை அல்லது சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் அதிகாரசபை தகுதியானதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய எந்தக் காலப்பகுதியினுள் அத்தகைய ஆள் அத்தகைய கொவிட்-19 சூழ்நிலைக்கு உட்பட்டிருந்தாரோ அந்தக் காலப்பகுதி சொல்லப்பட்ட விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியைக் கணிப்பதில் நீக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட நிவாரணம் எதுவும் எந்த விண்ணப்பத்திற்கு அல்லது மேன்முறையீட்டுக்கு பின்வரும் விதிகள் ஏற்புடையதாகின்றதோ அந்த ஏதேனும் விண்ணப்பம் அல்லது மேன்முறையீடு தொடர்பில் ஏற்புடையததாதல் ஆகாது:—

(அ) (i) 2020, மே 6 ஆந் தேதிய 2174/4 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2020 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற (தற்காலிக ஏற்பாடுகள்) விதிகள்;

(ii) 2021, சனவரி 21ஆந் தேதிய 2211/56 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற (தற்காலிக ஏற்பாடுகள்) விதிகள்;

(iii) 2020 ஆண்டு மே 12 ஆந் தேதிய 2175/2 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2020 ஆம் ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்ற (அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்திலிருந்தான மேன்முறையீட்டுக்கான நடவடிக்கைமுறை) (தற்காலிக ஏற்பாடுகள்) விதிகள்; அல்லது

(iv) 2021 ஆம் ஆண்டு சனவரி 21 ஆந் தேதிய 2211/56 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் மேன்முறையீட்டு நீதிமன்ற (அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்திலிருந்தான மேன்முறையீடுகளுக்கான நடவடிக்கைமுறை (தற்காலிக ஏற்பாடுகள்) விதிகள்.

(ஆ) ஏதேனும் கொவிட்-19 சூழ்நிலை தொடர்பில் நிவாரணமொன்றாக ஏதேனும் காலத்தினை விலக்காக அளிக்கின்ற, இச்சட்டத்தின் தொழிற்பாட்டு காலத்தினுள் அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின்கீழ் ஆக்கப்படக்கூடிய வாறான உயர்நீதிமன்ற விதிக்கு அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற விதிக்கு ஏற்புடைய தாகின்ற ஏதேனும் விண்ணப்பம் அல்லது மேன்முறையீடு தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் நிவாரணம் ஏற்புடையதாத லாகாது.

## பாகம் II

### மாற்று நீதிமன்றங்களின் பெயர்குறித்தல்

*கொவிட்-19 சூழ்நிலையினால் பாதிக்கப்பட்ட நீதிமன்றங்களின் இடத்தில் மாற்று நீதிமன்றங்களின் பெயர்குறித்தல்*

**3.** (1) 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 46 ஆம் மற்றும் 47 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளிற்கு அமைய, ஏதேனும் முதல்நிலை நீதிமன்றங்களுக்கு சாதாரண தொழிற்பாடு ஏதேனும் கொவிட்-19 சூழ்நிலை காரணமாக சீர்குலைந்துள்ள விடத்து, நீதிச்சேவை ஆணைக்குழுவானது எப்போது கொவிட்-19 சூழ்நிலையில் இருந்து வெளிவருகின்ற நேரம் அக்காலப்பகுதிக்கு அத்தகைய நீதிமன்றம் அமைந்துள்ள இடத்தில் மாற்று நீதிமன்றம் ஒன்றாக ஒருப்பாட்டு நியாயாதிக்கத்தைக் கொண்ட அண்மிய நீதிமன்றம் ஒன்றை பெயர்குறிக்கலாம். அத்தகைய முதன்நிலை நீதிமன்றத்தில் அல்லது கோப்பிடப்பட்ட அல்லது அதனால் கவனத்திற்கொள்ளப்பட்ட ஏதேனும் வழக்கு, குற்றவழக்கு, வழக்குநடவடிக்கை அல்லது விடயம் அல்லது கோப்பிடப்பட்ட ஏதேனும் புதிய வழக்கு, குற்றவழக்கு, வழக்குநடவடிக்கை அல்லது விடயம் அவ்வாறு பெயர்குறிக்கப்பட்ட நீதிமன்றத்தினால் கவனத்திற்கெடுக்கப்படுதல் வேண்டும் அல்லது விசாரிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வழக்கு, குற்றவழக்கு, வழக்கு நடவடிக்கை அல்லது விடயம் பற்றி மாற்றம் எதுவும் -

(அ) அத்தகைய ஏதேனும் முதல்நிலை நீதிமன்றம் அத்தகைய வழக்கை, குற்றவழக்கை, வழக்கு நடவடிக்கையை அல்லது தீர்புக்கான விடயத்தை கட்டளை அல்லது தீர்ப்பு விளம்பலை ஒதுக்கி வைத்துள்ளவிடத்து; அல்லது

(ஆ) அத்தகைய வழக்கில் குற்றவழக்கில் அல்லது விடயத்தின் அனைத்து கேட்புகளாகவும் அத்தகைய முதல் நிலை நீதிமன்றத்தின் முன்னர் முடிவுசெய்யப்பட்டிருக்குமிடத்து,

செய்யப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட மாற்று நீதிமன்றத்தினால் கோப்பிடப்பட்ட அல்லது அதனால் கவனத்திற் கொள்ளப்பட்ட வழக்கு, குற்றவழக்கு, வழக்கு நடவடிக்கை அல்லது விடயம் மற்றும் நீதிமன்றத்தினால் தலைமைதாங்கும் நீதிபதியினால் அத்தகைய தொடக்க நீதிமன்றத்தின் சாதாரண பணிகளை மீளத் தொடங்குவதன் மேல் அத்தகைய வழக்குத் தொடர்பாக முன்னர் பிரயோகிக்கப்பட்ட நியாயாதிக்கத்தினை முதனிலை நீதிமன்றத்திற்கு மாற்றலாம்:

ஆயின், எவ்வாறாயினும் இவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வழக்கு, குற்றவழக்கு, வழக்கு நடவடிக்கை அல்லது விடயம் பற்றிய மாற்றம் எதுவும் -

(அ) மாற்று நீதிமன்றம் அத்தகைய வழக்கை, குற்றவழக்கை, வழக்கு நடவடிக்கையை அல்லது தீர்ப்புக்கான விடயத்தை, கட்டளையை அல்லது வேறு தீர்ப்பு விளம்பலை ஒதுக்கிவைத்துள்ளவிடத்து; அல்லது

(ஆ) அத்தகைய வழக்கின், குற்றவழக்கின், வழக்கு நடவடிக்கையின் அல்லது விடயத்தின் விசாலிப்புகள் யாவும் அத்தகைய மாற்ற நீதிமன்றம் முன்னர் முடிவுசெய்துள்ளவிடத்து,

செய்யப்படுதலாகாது.

பாகம் III

## தொலை தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி நீதிமன்ற நடவடிக்கை முறைகளை நடாத்துதல்

*தொலை தொடர்பாடல் தொழிநுட்பத் தினைப் பயன்படுத்தி நீதிமன்ற நடவடிக்கை முறைகளை நடாத்துதல்*

**4**. வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அடங்கியுள்ளவை எது எவ்வாறிருப்பினும், முதனிலை நீதிமன்றத்தின் முன்னர் ஏதேனும் வழக்கு, விண்ணப்பம், மேன்முறையீடு அல்லது வேறு நடவடிக்கை முறைகள் உள்ளவிடத்து, ஏதேனும் கொவிட்-19 சூழ்நிலை காரணமாக-

(அ) எவரேனும் ஆள் நீதிமன்றத்தில் தோன்றுவதற்கு இயலாதவிடத்து;

(ஆ) நீதிமன்ற நடவடிக்கைமுறைகள் சாதாரண நடவடிக்கை முறையின்கீழ் நடாத்துவதற்கு இயலாதவிடத்து,

அத்தகைய நீதிமன்றத்தின் முன்னர் அத்தகைய வழக்கு, விண்ணப்பம், மேன்முறையீடு அல்லது நடவடிக்கைமுறை பிரதம நீதியரசரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய தொலைத் தொடர்பு தொழினுட்பத்தினை பயன்படுத்தி உருவாக்கப்பட்ட நேரலைக் காணொளி அல்லது நேரலைத் தொலைக்காட்சி இணைப்பு போன்ற வழிமுறைகளினால் நடாத்தப்படலாம்.

பாகம் IV

## ஒப்பந்தங்கள் தொடர்பான தற்காலிக நிவாரணம்

*அட்டவணைப் படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள்*

**5**. இப்பாகத்தின் நோக்கத்துக்காக, "அட்டவணைப்படுத்தப்பட்ட ஒப்பந்தம்" ஒன்று என்பது இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் அல்லது காலத்துக்குக் காலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் ஒப்பந்தம் எனப் பொருள்படும்.

ஒப்பந்தஞ்சார் கடப்பாடுகளை செயல்நிறை வேற்றுதலுக்கு அல்லது ஒப்பந்தஞ்சார் உரிமைகளைப் பிரயோகிப்ப தற்கான இயலாமை தொடர்பான நிவாரணம்

**6**. *(1)* வேறு ஏதேனும் எழுத்திலான சட்டம், ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையில் அடங்கியுள்ளவை எது எவ்வாறிருப்பினும், அட்டவணைப்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களை எவரேனும் திறத்தவர்-

(அ) ஏதேனும் கொவிட்-19 சூழ்நிலைக்கமைவாக; அத்துடன்

(ஆ) அத்தகைய கொவிட்-19 சூழ்நிலை காரணமாக அத்தகைய ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் கடப்பாட்டினை செயல்நிறை வேற்றுவதற்கு இயலாதுள்ளவிடத்து அல்லது ஏதேனும் உரிமையை பிரயோகிக்கவியலாதவிடத்து,

அத்தகைய திறத்தவர் இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் நிவாரணத்துக்கான விண்ணப்பமொன்றினை ஏதேனும் ஏற்புடைமையாகும் சட்டத்தின்கீழ் அத்தகைய ஒப்பந்தம் தொடர்பில் தீர்ப்பளிப்பதற்கான நியாயாதிக்கம், அதிகாரம் அல்லது தத்துவத்தினை வேறுவகையில் கொண்டுள்ளதனை நீதிமன்றத் திற்கு, நியாயசபைக்கு அல்லது ஏதேனும் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் அதிகாரசபைக்கு விண்ணப்பமொன்றினைச் செய்யலாம்.

*(2)* ஓராம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்றினை பெற்றதன்மேல், அத்தகைய நீதிமன்றம், நியாயசபை அல்லது சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட நியாயசபை அல்லது வேறு ஏதேனும் அதிகாரசபை 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய திறத்தவரை அட்டவணை மயப்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்கீழ் அத்தகைய கடப்பாட்டினை அல்லது உரிமையினை செயல்நிறைவேற்றுவதற்கு அல்லது பிரயோகிப்பதற்கு வேறுவகையில் தேவைப்படுத்தப்படக் கூடியதான காலப்பகுதியினுள் அவரை கடப்பாட்டினை செயல் நிறைவேற்றுவதிலிருந்து அல்லது உரிமையினைப் பிரயோகிப்ப திலிருந்து தடுக்கக்கூடியதான காலப்பகுதியிலிருந்து விலக்கலாம்:

ஆயின், விண்ணப்பத்தினைச் செய்கின்ற திறத்தவருக்கு ஏற்கனவே ஒப்பந்தத்துக்கான ஏனைய திறத்தவரினால் அல்லது திறத்தவர்களினால் தன்னிச்சையான ஒப்பந்தத்தின் நியாயாதிக்கங்களுக்கிணங்க, நிவாரணமொன்றுக்கான நேரத்திற்

கான விலக்கலானது வழங்கப்பட்டிருப்பின், நீதிமன்றம், நியாயசபை அல்லது ஏதேனும் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட நியாயசபை அல்லது வேறு ஏதேனும் அதிகாரசபை, அது நியாயமானதும் ஒப்புரவானதுமென திருப்திப்படுவதன்மேல், இப்பிரிவின்கீழ் மேலதிக நிவாரணத்தினை வழங்கலாம்.

(3) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் நிவாரணத்துக்கான விண்ணப்பமொன்று 9 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏற்கனவே அளிக்கப்பட்ட ஏதேனும் அவசரநிலை கடன்களைத் திருப்பிக் கொடுத்தலை தற்காலிகமாக நிறுத்திவைத்தலை அல்லது நேர நீட்டிப்பினை வெளிப்படுத்துகின்றதான ஏதேனும் கருவி உள்ளடங்கலாக விண்ணப்பத்தினை ஆதரிக்கின்ற இயைபான கருவிகளை இணைத்தல் வேண்டும்.

6 இன்கீழான விண்ணப்பம் வழக்குகளைத் தொடுப்பதற்கான உரிமையைத் தடுத்தலாகாது

**7.** (1) ஏதேனும் கொவிட்-19 சூழ்நிலைக்கமைந்தவாறான மற்றும் கொவிட் 19 சூழ்நிலை காரணமாக அட்டவணைப்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்கீழ் ஏதேனும் கடப்பாட்டினை புரிவதற்கு இயலாதவராகவுள்ள அல்லது உரிமையை பிரயோகிப்பதற்கு இயலாதவராகவுள்ள அத்தகைய ஒப்பந்தத்துக்கான எவரேனும் திறத்தவரினால் 6 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று அத்தகைய இயலாமை தொடர்பில் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வழக்கு தொடுப்பதிலிருந்து அத்தகைய ஒப்பந்தத்துக்கான வேறு எவரேனும் திறத்தவரை தடுத்தலாகாது:

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய இயலாமையானது கொவிட்-19 சூழ்நிலை காரணமாக எனும் நிகழ்வானது அத்தகைய வழக்கில் அத்தகைய கடப்பாட்டினை செயல்நிறைவேற்றுவதற்கு அல்லது அத்தகைய உரிமையினை பிரயோகிப்பதற்கு இயலாதவராகவுள்ளவாறான திறத்தவருக்கு கிடைக்கப்பெறுகின்ற பாதுகாப்பொன்றாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட வழக்குகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது —

(அ) ஒப்பந்தம்சார் கடப்பாட்டினை செயல்நிறைவேற்றுவதற்கு இயலாதவராகவுள்ளவரான திறத்தவர் அல்லது அத்தகைய திறத்தவரின் உத்தரவாதமளிப்பவர் அல்லது பிணைப்பொறுப்பாளருக்கெதிராக நீதிமன்றத்திலுள்ள வழக்கு;

(ஆ) ஒப்பந்தம்சார் கடப்பாட்டினை செயல்நிறைவேற்றுவதற்கு இயலாதவராகவுள்ள திறத்தவருக்கு அல்லது அத்தகைய திறத்தவரின் உத்தரவாதமளிப்பவர் அல்லது பிணைப்பொறுப்பாளருக்கெதிராக 1995 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நடுத்தீர்ப்பாளர் சட்டத்தின்கீழான வழக்கு நடவடிக்கை முறைகள்;

(இ) ஏதேனும் அசையாத ஆதனத்தின் மீதான ஏதேனும் பிணைப்பொறுப்பினை அமுலாக்குவதற்கான வழக்கு;

(ஈ) வியாபாரம், தொழில், உயர்தொழில் நோக்கத்துக்காக பயன்படுத்தப்படும் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் மீதான ஏதேனும் பிணையினை அமுலாக்குவதற்கான வழக்கொன்று;

(உ) ஒப்பந்தம்சார் கடப்பாட்டினை செயல்நிறைவேற்றுவதற்கு இயலாதவரான திறத்தவர் அல்லது அத்தகைய திறத்தவரின் உத்தரவாதமளிப்பவர் அல்லது பிணைநிற்பவர் தொடர்பில் இணக்கத்தினை அல்லது ஒழுங்கேற்பாடொன்றினை அங்கீகரிப்பதற்கு அழைக்கப் படவேண்டிய கடன்பெறுநர்களின் கூட்டமொன்றுக்கான 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழான விண்ணப்பமொன்று;

(ஊ) ஒப்பந்தம்சார் கடப்பாட்டினை செயல்நிறைவேற்றுவதற்கு இயலாதவரான திறத்தவர் அல்லது அத்தகைய திறத்தவரின் உத்தரவாதமளிப்பவர் அல்லது பிணை நிற்பவர் தொடர்பில் நீதிமுறை முகாமைத்துவ கட்டளை யொன்றுக்கான விண்ணப்பம்;

(எ) ஒப்பந்தம்சார் கடப்பாட்டினை செயல்நிறைவேற்றுவதற்கு இயலாதவராகவுள்ள திறத்தவர் அல்லது அத்தகைய திறத்தவரின் உத்தரவாதமளிப்பவர் அல்லது பிணைநிற்பவரின் முடிவுறுத்தலுக்கான விண்ணப்ப மொன்று;

(ஏ) ஒப்பந்தம்சார் கடப்பாட்டினை செயல்நிறைவேற்றுவதற்கு இயலாதவரான திறத்தவர் அல்லது அத்தகைய திறத்தவரின் உத்தரவாதமளிப்பவர் அல்லது பிணைப் பொறுப்பாளர் தொடர்பிலான வங்கிமுறிவு விண்ணப்பமொன்று;

(ஐ) ஒப்பந்தம்சார் கடப்பாட்டினை செயல்நிறைவேற்றுவதற்கு இயலாதவரான திறத்தவர் அல்லது அத்தகைய திறத்தவரின் உத்தரவாதமளிப்பவர் அல்லது பிணைப்பொறுப்பாளர் தொடர்பில் ஏதேனும் பொறுப்பு முயற்சியின்மீது பெறுநரொருவரை அல்லது முகாமை யாளரொருவரை நியமிப்பதற்கான வழக்கொன்று;

(ஒ) நீதிமன்ற விடுப்பு தவிர்ந்த ஒப்பந்தம்சார் கடப்பாட்டினை செயல்நிறைவேற்றுவதற்கு இயலாதவரான திறத்தவர் அல்லது அத்தகைய திறத்தவரின் உத்தரவாதமளிப்பவர் அல்லது பிணைப்பொறுப்பாளர் தொடர்பில் ஏதேனும் ஆதனத்திற்கெதிரான தொடக்கத்துக்கான வழக்கு அல்லது அறவீட்டு நிறைவேற்றம், இடர் அல்லது வேறு சட்ட செயல்முறை;

(ஓ) வியாபாரம், வணிகம் அல்லது உயர்தொழில் நோக்கத்துக்காக பயன்படுத்தப்பட்ட உடன்படிக்கையாக வுள்ள எவையேனும் அசையாத உருப்படிகள் பற்றிய குத்தகை, வாடகை கொள்வனவு உடன்படிக்கை அல்லது உரித்தினை தக்கவைத்தலுக்கான உடன்படிக்கையின் கீழான எவையேனும் பண்டங்களை மீள் உடமை கொள்ளலுக்கான வழக்கொன்று;

(ஔ) செயல்நிறைவேற்ற முடியாத கடப்பாடானது வாடகை அல்லது ஏனைய பணங்களை செலுத்தாமையாகவுள்ள விடத்து, அசையாத ஆதனத்தின் குத்தகையாக அல்லது உரிமமாக உள்ளபோது அட்டவணைப்படுத்தப்பட்ட ஒப்பந்தமொன்றினை முடிவுறுத்தவதற்கான வழக்கொன்று;

(க) அசையாத ஆதனத்தின் குத்தகை அல்லது உரிமமாக வுள்ள அல்லது ஒத்தவிளைவினைக் கொண்டுள்ள வேறு ஏதேனும் உரிமையினைப் பிரயோகித்ததாகவுள்ள அட்டவணைப்படுத்தப்பட்ட ஒப்பந்தமொன்றின்கீழான மீள்நுழைவு அல்லது பறிமுதலுக்கான உரிமையினை பிரயோகித்தலுக்கான வழக்கொன்று;

(ங) ஒப்பந்தம்சார் கடப்பாட்டினை செயல்நிறைவேற்றுவதற்கு இயலாதவராகவுள்ளவரான திறத்தவருக்கு அல்லது அத்தகைய திறத்தவரின் உத்தரவாதமளிப்பவர் அல்லது பிணைப் பொறுப்பாளருக்கெதிராக 1995 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நடுத்தீர்ப்பாளர் சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட நடுத்தீர்ப்புசார் நடவடிக்கை முறைகளைச் செய்வதற்கு நீதிமன்ற தீர்ப்பினை அல்லது அளிப் பொன்றினை அமுலாக்குவதற்கான வழக்கொன்று;

(ச) உரிமையை பிரயோகிப்பதற்கு இயலாதவராகவுள்ள திறத்தவருக்கு செலுத்தப்பட்ட ஏதேனும் பிரதிபயனின் ஏதேனும் பாகத்திற்கான பறிமுதல்;

(ஞ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் வழக்கு.

ஐயத்தைத் தவிர்த்ததன்

**8**. ஐயத்தைத் தவிர்ப்பதற்கான, இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள் அட்டவணைப்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்கீழ் திறத்தவர் ஒருவரினால் புரியப்படுவதற்கு அல்லது பிரயோகிக்கப் படுவதற்கு வேறுவகையில் தேவைப்படுத்தப்பட்டிருக்கக்கூடிய ஏதேனும் கடப்பாட்டை புரிவதிலிருந்து அல்லது ஏதேனும்

உரிமையைப் பிரயோகிப்பதிலிருந்து அத்தகைய ஒப்பந்தம் ஒன்றிற்கு அத்தகைய திறத்தவர் ஒருவரை எவ்வகையிலும் விலக்களிக்கப்படுவதாக பொருள் கொள்ளப்படுதலாகாது என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

## பாகம் V

### பொது

இச்சட்டத்தின் கீழான நிவாரண வரையறைகள்

**9.** (1) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் அல்லது 6 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நிவாரணம் ஒன்றாக தவிர்க்கப்பட்ட ஏதேனும் காலப்பகுதி பன்னிரெண்டு மாத காலப்பகுதி ஒன்றை விஞ்சுதலாகாது:

ஆயினும், நிவாரணம் ஒன்றாக தவிர்க்கப்படக்கூடிய பன்னிரெண்டு மாதங்களை விஞ்சுகின்ற காலப்பகுதி நியாயமானதும் ஒப்புரவானதும் என ஏதேனும் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட நீதிமன்றம், நியாயசபை அல்லது வேறு ஏதேனும் அதிகாரசபை திருப்திப்படுமிடத்து அவ்வாறு தவிர்க்கப்படலாம் என்பதுடன் அவ்வாறு தவிர்க்கப்பட்ட காலப்பகுதி மேலும் ஆறு மாத காலப்பகுதி ஒன்றை விஞ்சுதலாகாது:

ஆயினும், மேலும் நிவாரணம் ஒன்றாக தவிர்க்கப்பட்ட காலப்பகுதி மொத்தத்தில் பதினெட்டு மாதங்களை விஞ்சுதலாகாது.

(2) 2020, மாச்சு 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் கொரோனா வைரஸ் நோய் 2019 (கொவிட்-19) அதிகரிக்கும் சூழ்நிலை தொடர்பில் நிவாரணம் ஒன்றாக மத்திய வங்கியினால் அல்லது வேறு ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையினால் ஏதேனும் சட்ட இசைவுத் தாமதம் வழங்கப்பட்டுள்ளவிடத்து, இச்சட்டத்தின் பாகம் IV இன்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் நிவாரணம் ஏற்புடையதாதலாகாது.

எண்பிக்கும் பொறுப்பு

**10**. ஏதேனும் கொவிட்-19 சூழ்நிலை காரணமாக-

(அ) 2 ஆம் பிரிவின் நோக்கத்திற்காக விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியுடன் இணங்கியொழுகுவதற்கு இயலாதிருக்கின்றதெனவும்; அல்லது

(ஆ) பிரிவு 6 அல்லது 7 இன் நோக்கத்திற்காக ஏதேனும் ஒப்பந்தக் கடப்பாட்டை புரிவதற்கு அல்லது ஏதேனும் ஒப்பந்த உரிமையை பிரயோகிப்பதற்கு இயலாதிருக்கின்றதெனவும்,

எண்பிக்கும் பொறுப்பானது அத்தகைய பிரிவுகளின் கீழ் விடயத்திற்கேற்ப நிவாரணத்திற்காக அல்லது உரிமைக் கோரிக்கைக்காக விண்ணப்பத்தைச் செய்கின்ற திறத்தவர்மீது எதிர்க்காப்பு செய்யப்படுதல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்

**11**. (1) அமைச்சர், விதித்துரைக்கப்படுவதற்கு இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்படுகின்ற எல்லாக் கருமங்கள் தொடர்பில் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு தேவைப் படுத்தப்படுகின்றவை அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றவை தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் அதனது வெளியீட்டுத் தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்தின்முன்னர் இடப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து அதன்கீழ் முன்னரே ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டதாக கருதப்படக்கூடிய ஏதேனும் ஒழுங்குவிதியின் தேதிபற்றிய அறிவித்தலானது வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**12**. இச்சட்டத்தின் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி- பொருள்கோடல்

"மத்திய வங்கி" என்பது, (420 ஆம் அத்தியாயமான) பணச்சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி எனப் பொருள்படும்;

"கொவிட்-19" என்பது, (222 ஆம் அத்தியாயமான) தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புத் தொடர்பான கட்டளைச் சட்டத்தின்கீழ் 2020, மார்ச் 20 ஆந்தேதிய 2167/18 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல்மூலம் தனிமைப்படுத்தத்தகு நோயொன்றாக வெளிப்படுத்தப்பட்ட கொரோனா வைரஸ் நோய் 2019 (கொவிட்-19) எனப் பொருள்படும்;

"கொவிட் 19 சூழ்நிலையானது" பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது-

(அ) கொவிட் -19;

(ஆ) இலங்கையின் அல்லது வேறு நாட்டின் ஆள்புலத்தில் ஏதேனும் சட்டத்துடன் அல்லது அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் நியதிச்சட்ட குழுமத்தின் கட்டளை அல்லது பணிப்புடன் அல்லது வேறொரு நாட்டின் அல்லது ஆள்புலத்தின் அரசாங்கத்தின் அல்லது பகிரங்க அதிகாரசபையின் கொரோனா வைரஸ் 2019 (கொவிட்-19) நோயின் காரணத்தினால் அல்லது அதனுடன் தொடர்புபட்ட ஏதேனும் சட்டம், கட்டளை அல்லது பணிப்பாகவுள்ளவற்றுடன் தொழில்படுதல்;

(இ) பந்தி (அ) அல்லது (ஆ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட சூழ்நிலைகளிலிருந்து அதிகரிக்கின்ற அல்லது அதன் விளைவாந்தன்மையினவான வேறு ஏதேனும் சூழ்நிலை.

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் உறுப்புரை **44** அல்லது **45** இன்கீழ் இச்சட்டத்தில் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் எனப் பொருள்படும்;

"விதித்துரைத்தல்" என்பது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதித்துரைத்தல் எனப் பொருள் படும்;

"ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை" என்பது, அட்டவணைப் படுத்தப்பட்ட ஒப்பந்தம் ஒன்று தொடர்பில் ஒழுங்குபடுத்தும் அல்லது அங்கீகரிக்கும் அதிகாரசபை யாக இருப்பதற்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அதிகாரசபை ஒன்று எனப் பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**13**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**முதலாம் அட்டவணை** (பிரிவு 5)

**அட்டவணைப்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள்**

1. அட்டவணைப்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கு கின்றன –

(அ) இலங்கையில் அமைந்துள்ள ஏதேனும் வர்த்தக அல்லது கைத்தொழில்சார் அசைவற்ற ஆதனத்திற்கெதிராக வசதியொன்று முழுமையாக அல்லது பகுதியளவில் உறுதிப்படுத்தப்படுகின்றவிடத்து 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட வங்கியொன்றினால் அல்லது தொழில்முயற்சி யொன்றிற்கு 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித் தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பெனியொன்றினால் கடன்வசதி ஒன்றினை அளிப்பதற்கான ஒப்பந்தமொன்று;

(ஆ) தொழில்முயற்சியொன்றிற்கு 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட வங்கியினால் அல்லது 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பெனியினால் கடன்வசதி யொன்றினை அளிப்பதற்கான ஒப்பந்தம் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது:-

(i) இலங்கையில் உள்ள ஏதேனும் பொறித்தொகுதி, இயந்திரம் அல்லது நிலையான சொத்துகளுக்கெதிராக முழுமையாக அல்லது பகுதியளவில் அத்தகைய வசதி உறுதிப்படுத்தப் படுகின்றவிடத்து; அத்துடன்

(ii) விடயத்திற்கேற்ப அத்தகைய பொறித்தொகுதி, இயந்திரம் அல்லது நிலையான சொத்து என்பவற்றை தயாரிக்கும், உற்பத்திசெய்யும் அல்லது வேறு தொழில் நோக்கங்களுக்காக பயன்படுத்துகின்றவிடத்து;

(இ) நிருமாண ஒப்பந்தம் அல்லது வழங்குதல் ஒப்பந்தம் ஒன்றைப் பின்பற்றி வழங்கப்படுகின்றதான செயலாற்றுகை முறி அல்லது அதற்குச் சமமானவை;

(ஈ) 1982 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, பாவனையாளர் கடன் சட்டத்தின் கருத்தெல்லைக்கு உட்பட்ட வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை, அவ்வுடன்படிக்கையின்கீழ் வாடகைக்கு எடுக்கப்பட்ட அல்லது நிபந்தனையில் விற்பனைசெய்யப்பட்ட பண்டம்

(i) ஏதேனும் பொறித்தொகுதி, இயந்திரத்தொகுதி அல்லது நிலையான சொத்து என்பவை உற்பத்தி, தயாரித்தல் அல்லது வேறு தொழில் நோக்கங்களுக்காகப் பயன் படுத்தப்படுகின்ற விடத்து இலங்கையில் உள்ள அத்தகைய பொறித்தொகுதி, இயந்திரத்தொகுதி அல்லது நிலையான சொத்து என்பவை யாக; அல்லது

(ii) வர்த்தக வாகனம் ஒன்றாக

உள்ளவிடத்து;

(ஊ) (i) ஏதேனும் பொறித்தொகுதி, இயந்திரத்தொகுதி அல்லது நிலையான சொத்து என்பவை உற்பத்தி, தயாரித்தல் அல்லது வேறு தொழில் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற விடத்து இலங்கையில் உள்ள அத்தகைய பொறித்தொகுதி, இயந்திரத்தொகுதி அல்லது நிலையான சொத்து என்பவை யாக; அல்லது

(ii) வர்த்தக வாகனம் ஒன்றாக

என்பவற்றின் குத்தகை ஒன்று;

(ஊ) நிதிக்குத்தகையின்கீழ் வழங்கப்பட்ட சாதனம்-

(i) ஏதேனும் பொறித்தொகுதி, இயந்திரத்தொதி அல்லது நிலையான சொத்து என்பவை உற்பத்தி, தயாரித்தல் அல்லது வேறு தொழில் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படு கின்றவிடத்து இலங்கையில் உள்ள அத்தகைய பொறித் தொகுதி, இயந்திரத்தொகுதி அல்லது நிலையான சொத்து என்பவையாக; அல்லது

(ii) வர்த்தக வாகனம் ஒன்றாக

உள்ளவிடத்து 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதிக்குத்தகைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட நிதிக்குத்தகை ஒன்று.

(எ) நிகழ்வு ஒப்பந்தம்;

(ஏ) சுற்றுலாப்பயணம் தொடர்புபட்ட ஒப்பந்தம்;

(ஐ) நிருமாண ஒப்பந்தம் அல்லது வழங்குதல் ஒப்பந்தம்;

(ஒ) வதிவற்ற அசையா ஆதனத்தின் குத்தகை ஒன்று;

(ஓ) வீடமைப்புத் தொகுதியின் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கூறுகளின் கொள்வனவுக்காக உட்கருதும் கொள்வனவாளருக்கு வீடமைப்பு விருத்தியில் ஒருவரால் வழங்கப்பட்ட விருப்பத்தெரிவு;

(ஔ) வீடமைப்புத் தொகுதியின் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கூறுகளின் விற்பனை மற்றும் கொள்வனவுக்காக வீடமைப்பு விருத்தி யாளர் மற்றும் கொள்வனவாளருக்கு இடையிலான உடன்படிக்கை;

(க) வர்த்தக ஆதனத்தின் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட கூறுகளின் கொள்வனவுக்காக உட்கருதுகின்ற கொள்வனவாளருக்கு வர்த்தக ஆதன விருத்தியாளர் ஒருவரினால் வழங்கப்பட்ட விருப்பத்தெரிவு;

(ங) வர்த்தக ஆதனத்தின் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட கூறுகளின் விற்பனை மற்றும் கொள்வனவுக்காக வர்த்தக ஆதன விருத்தியாளர் மற்றும் கொள்வனவாளருக்கிடையிலான உடன்படிக்கை;

2. இவ்வட்டவணையின் நோக்கத்துக்காக-

"வர்த்தக ஆதன அபிவிருத்தியாளர்" என்பது, வர்த்தக ஆதன அபிவிருத்தி தொழிலில் ஈடுபடுகின்றவரான எவரேனும் ஆள் எனப் பொருள்படும்;

"வர்த்தக ஆதன அபிவிருத்தி" என்பது, எவ்வெண்ணிக்கையினவான வர்த்தக ஆதனக் கூறுகளின் நிருமாணம் அல்லது நிருமாணத்தை விளைவித்தல், அத்தகைய வர்த்தக ஆதனத்தை நிறுவும் நோக்கத்திற்காக காணியில், காணியின்மீது, காணியின்மேல் அல்லது காணியின்கீழான ஏதேனும் கட்டிடத் தொழிற்பாடு உள்ளடங்கலாக அத்துடன் அத்தகைய வர்த்தக ஆதனத்திற்கு இணையாக இருக்கக் கூடியதான காணியின் விற்பனை எனப்பொருள்படும்;

"வர்த்தக ஆதனம்" என்பது, எந்த முதன்மையான நோக்கம் வர்த்தக அல்லது கைத்தொழில் நோக்கமாக இருக்கின்றதோ அந்த முதன்மையான நோக்கம் வர்த்தக அல்லது கைத்தொழில் நோக்கம் ஒன்றுக்காக அல்லது இரண்டும் கலந்த நோக்கம் ஒன்றுக்காக பயன்படுத்துவதற்கு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படுகின்றதான ஏதேனும் கட்டிடம் அல்லது வேறு வளவுகள் எனப்பொருள்படும்;

"வர்த்தக வாகனம்" என்பது, வர்த்தக அல்லது கைத்தொழில் நோக்கம் ஒன்றிற்கு பயன்படுத்தப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனம் எனப்பொருள்படும்;

"நிருமாண ஒப்பந்தம்" என்பது, பின்வரும் எவற்றுக்காகவும் ஆளொருவருடன் அல்லது உருவகம் ஒன்றுடனான உடன்படிக்கை எனப் பொருள்படும்;

(அ) நிருமாண வேலையை நிறைவேற்றுதல்;

(ஆ) விடயத்திற்கேற்ப அத்தகைய ஆளிற்கு அல்லது உருவகத்திற்கு உப ஒப்பந்தத்தின்கீழாயினுஞ்சரி அல்லது வேறுவகையிலாயினுஞ்சரி மற்றவர்களினால் நிருமாண வேலையை நிறைவேற்றுவதற்கு ஒழுங்குபடுத்தல்;

(இ) நிருமாண வேலையை நிறைவேற்றுவதற்காக தனது சொந்த தொழிலாளரை அல்லது உருவகத்திற்கு சொந்தமான தொழிலாளரை அல்லது மற்றவர்களின் தொழிலாளரை வழங்குதல்.

"நிகழ்வு ஒப்பந்தம்" என்பது, பின்வருவனவற்றுக்காக இடம், தங்குமிடவசதி, வாழ் வசதிகள், போக்குவரத்து களியாட்டம், உணவு வழங்குதல் அல்லது வேறு பண்டங்கள் அல்லது சேவைகளை வழங்கு வதற்கான ஒப்பந்தம் ஒன்று எனப்பொருள்படும்;

(அ) தொழில் கூட்டம், ஊக்குவிப்பு பயணம், மாநாடு, கண்காட்சி, விற்பனை நிகழ்வு, அரங்காற்றுகை நிகழ்வு, காட்சி, திருமண வைபவம் அல்லது ஏனைய சமூக ஒன்று கூடல் அல்லது விளையாட்டு; அல்லது

(ஆ) பந்தி (அ) வில் குறித்துரைக்கப்பட்ட நிகழ்வுகள் எவற்றினதும் பங்குபற்றுபவர்கள், வருகை தருபவர்கள், அதிதிகள், போசகர்கள் அல்லது பார்வையாளர்கள்.

"வீடமைப்பு வசதி" என்பது, மனித வாழ்விடத்திற்காக அல்லது மனித வாழ்விடத்திற்காகவும் தொழில் வளவுகளாகவும் முழுமையாக அல்லது முதன்மையாக நிருமாணிக்கப்பட்ட இசைவாக்கப்பட்ட அல்லது உட்கருதப்பட்ட கட்டிடம் அல்லது குடிமனைகளை உள்ளடக்கும்;

"வீடமைப்பு அபிவிருத்தியாளர்'' என்பது, வீடமைப்பு அபிவிருத்தி தொழில் ஒன்றில் ஈடுபடுகின்ற எவரேனும் ஆள் எனப்பொருள்படும்;

"வீடமைப்பு அபிவிருத்தி" என்பது, எவ்வெண்ணிக்கையினவான வர்த்தக ஆதனக் கூறுகளின் நிருமாணம் அல்லது நிருமாணத்தை விளைவித்தல், அத்தகைய வர்த்தக ஆதனத்தை நிறுவும் நோக்கத் திற்காக காணியில், காணியின்மீது, காணியின்மேல் அல்லது காணியின்கீழான ஏதேனும் கட்டிடத் தொழிற்பாடு உள்ளடங்கலாக அத்துடன் அத்தகைய வர்த்தக ஆதனத்திற்கு இணையாக இருக்கக் கூடியதான காணியின் விற்பனை எனப்பொருள்படும்;

"வழங்குகை ஒப்பந்தம்" என்பது, நிருமாண வேலையை நிறைவேற்றும் தொழிலில் ஈடுபடுகின்ற அல்லது நிருமாண வேலையை நிறைவேற்றச் செய்விக்கின்ற வேறு எவரேனும் திறத்தவருக்கு நிருமாண வேலை நோக்கத்திற்கு தேவைப்படும் பண்டங்களை வழங்குவதற்கு எந்த உடன்படிக்கையின்கீழ் ஒரு திறத்தவர்கள் பொறுப்பேற்கின்றாரோ அந்த உடன்படிக்கை;

"சுற்றுலாப் பயணத்துடன் தொடர்புபட்ட ஒப்பந்தம்" என்பது,

(அ) கடல்மூலம் அல்லது தரைமூலம் சர்வதேச ரீதியாக பயணிகளை கொண்டு செல்வதற்கான ஒப்பந்தம் ஒன்று;

(ஆ) இலங்கைக்கான வருகையாளர்கள், உள்நாட்டு சுற்றுலாப்பயணிகள், அல்லது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஆகியோருக்கான போக்குவரத்து, குறுங்கால

தங்குமிடவசதி, களியாட்டம், உணவருந்துதல், உணவளித்தல், சுற்றுலாப் பயணம் அல்லது வேறு சுற்றுலாப் பயணத்துடன் தொடர்புபட்ட பண்டங்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்தம் ஒன்று;

(இ) இலங்கையிலுள்ள சுற்றுலாப்பயணத்துறையை மேம்படுத்துவதற்கான அல்லது அத்தகைய சுற்றுலாப் பயணத்துறை தொடர்புபட்ட தயாரிப்புகளின் வியாபார அல்லது சில்லறை விற்பனை நோக்கங்களுக்காக விநியோகிப்பதற்கான ஒப்பந்தம் ஒன்று.

"அலகு" என்பது, ஏதேனும் கட்டிடத்தின் அல்லது கட்டிடம் ஒன்றின் பாகத்தின் இடையான அடுக்கு, ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மட்டங்களின்மீது இருப்பினுஞ்சரி அத்துடன் விதிவிட வர்த்தக அல்லது கைத்தொழில் நோக்கத்திற்காக முழுமையான அல்லது தனிவேறான அலகொன்றாக ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க பயன்படுத்துவதற்கு உட்கருதப்பட்ட அத்தகைய அடுக்கு எனப்பொருள்படும்;